**பசறை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பசறை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் கைத்தொழில் கடன்பட்டோர் 09 பேர் செலுத்த வேண்டிய ரூபா 983,635 ஆன தொகை கணக்குகளில் வேறாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு உடன்படுகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் 07 ஐ விநியோகித்ததற்கான கொடுப்பனவு ரூபா 16,333 ஆன தொகை ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு உடன்படுகின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய கைத்தொழில் கடன்பட்டோர் மீதி ரூபா 200,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு உடன்படுகின்றேன். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய கடன்பட்டோர் மீதி ரூபா 393,891 ஆயினும், ரூபா 500,000 எனக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு உடன்படுகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) (21)2 ஆம் பிரிவு | 452 பிரதேச சபை சிறு வீதிகள் ஆவணப்படுத்தப் பட்டிருந்த போதிலும் வர்த்தமானி ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | போதிய நிதி ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் அளவை செயற்பாடுகள் கால தாமதமாகி உள்ளதுடன், எதிர்காலத்தில் சில வீதிகளின் பெயர்களை வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ii) 47(1) ஆம் பிரிவு மற்றும் 49(ஆ) ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை திட்டமிடல் அனுமதிக்கப்பட்ட 13 புதிய நிர்மாணங்கள் தொடர்பாக இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட வேண்டும். | இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (iii) 134(1) ஆம் பிரிவு | அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களில் புதிய நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு புதிய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | ஆதன மதிப்பீட்டின் ஆரம்ப பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது வீதவரி மதிப்பீடு செய்யப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 371 | 2004, 2006 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 88,496 ஆன கட்டுநிதி தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | கட்டுநிதி தீர்வுசெய்யப்பட வேண்டும் | பெறுவோரின் தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 486 மற்றும் 189 | 1996 முதல் 2004 வரை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு கிடைத்த 03 காசோலைகள் மறுக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய ரூபா 75,712 ஆன பெறுமதி அறவிடப்பட்டிருக்க வில்லை. | வருமானத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 20 ஆண்டுகளாக இருந்து வரும் சிக்கலொன்றாக இருப்பதால் கணக்காய்வுக் குழுவின் ஆலோசணைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்டு 2 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 246,576 பெறுமதியான 26 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த வெளித்தரப்பினருக்கு அறிவித்து சரிசெய்யப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,069,852 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,166,523 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீதவரியும் வரியும் | 319,156 | 521,457 | 338,002 | 183,454 | 3,354,831 | 521,813 | 393,166 | 128,646 |
| ii | வாடகை | 17,096,000 | 9,370,872 | 9,334,372 | 36,500 | 13,453,158 | 6,948,890 | 6,905,348 | 43,542 |
| iii | ஏனைய வருமானம் | 22,781,800 | 3,183,974 | 1,538,552 | 1,645,422 | 15,126,093 | 2,622,264 | 1,354,098 | 1,268,166 |
| | | 40,196,956 | 13,076,303 | 11,210,926 | 1,865,376 | 31,934,082 | 10,092,967 | 8,652,612 | 1,440,354 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 13,076,303 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,865,376 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 14 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் கிடைக்க வேண்டிய நிலுவை வீதவரி, நிலுவை மூலதன மானியம், கடை கட்டணங்கள், நீர் கட்டணங்கள் கேள்வி கட்டணங்கள் மற்றும் நிலுவை ஏக்கர் வரி என மொத்தம் 1,332,864 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,616,541 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 5,175,283 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங் கண்டு மற்றும் அவற்றை மதிப்பிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் ரூபா 5,599,209 செலவிடப்பட்டு சேதனப் பசளை உற்பத்தி பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மின்சார வசதிகள் பெற்றுக் கொள்ளப்படாமை காரணமாக மீளாய்வாண்டு வரை அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சார வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மீள்சுழற்சி வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். | தற்போது தொழிலாளர் மூலம் மீள்சுழற்சி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் மின்சார வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மீள்சுழற்சி வேலைகள் மின்சக்தியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் |

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடலை பாதிக்கும் திண்மக் கழிவுப்பொருட்கள் கட்டுப்பாடின்றி சுற்றாடலக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மின்சார வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மீள்சுழற்சி வேலைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஓராண்டிற்கு மேற்பட்ட இருந்து வரும் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் ரூபா 15,377,279 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனங்களிடமிருந்து பணம் கிடைத்தவுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். |

3.3 **மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 பதவிக்குரிய 03 மிகை பதவியணியினருக்கு அங்கீகாரம் பெறற்ப்பட்டிருக்கவில்லை. | மிகை பதவியணியினருக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | 06 முன்பள்ள பாடசாலைகள் காணப்படுவதல் 06 ஆசிரியர்களின் தேவை காணப்படுகின்றன. |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 பதவிகளுக்குரிய 05 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும் | பதவி ஒன்றுக்காக 02 அமைய ஊழியர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன் ஒரு பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. எஞ்சிய 03 வெற்றிடங்களின் தேவைப்பாடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. |

3.4 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ெ2002 ஆம் ஆண்டில் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 875,000 கரயமான வீதி பதப்படுத்தலொன்று மீளாய்வாண்டு வரை விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | இயந்திரம் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளதால் எதிர்வரும் காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5 **பெறுகை செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக் கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

4. **நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

4.1 **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்விற்காக சபை தயாராகி இருந்த போதும் நிறைவேற்றப் படவில்லை. |

4.2 **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ க் குழுவொன்றை தாபிக்க வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுவொன்றை தாபித்து கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |